# மனையாள் மாட்சிமைக் காவியம்



காப்பியக் கதிரோன் - எம். எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாள் மாட்சிமைக் காவியம்

காப்பியக் கதிரோன் எம்.எம். ஏ. அனஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் விபரம்


- நூலின் பெயர் :- மனையாள் மாட்சிமைக் காவியம்.
- விடயம் :- காவியம் (கவிதை)
- நூலாசிரியர் :- மூதூர் எம்.எம்.ஏ.அனஸ்
- உரிமை :- நூலாசிரியருக்கு
- வெளியீடு :- உமர்நெய்னார் புலவர் கழகம், மூதூர்.
- முதற் பதிப்பு :- நவம்பர் 2019
- பிரதிகள் :- 500
- விலை :- 300/=
- ISBN :- 978-955-38066-7-3



- தொடர்புகளுக்கு :- 0776288299




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்நூலாசிரியரின் வெளிவந்த ஏனைய நூல்கள்

1. அமைதிப் பூக்கள் (கவிதை)
2. மூதூர் உமர்நெய்னார் புலவரின் கவிதைகள் (தொகுப்பு)
3. மூதூர் உமர்நெய்னார் புலவரின் சீறாப்புராண உரை (மறுபதிப்பு)
4. மனிதம் (கவிதை)
5. ஊர் துறந்த காவியம்.
6. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகள்.
7. அன்பின் மகனுக்கு. (கடிதங்களின் தொகுப்பு)
8. அதிமேதகு ஜனாதிபதிக்கு ஓர்மடல்.
9. நாயகக் காவியம். (கிழக்கு மாகாண சாகித்திய விருது பெற்றது)
10. இஸ்லாமியக் குறள். (காத்தான்குடி பள்ளி வாயல்கள் சங்கங்களின் சம்மேளன விருது பெற்றது)
11. மழலைக் கீதம்.
12. அஸ்ரஃப் அமரகாவியம்.
13. வாப்பு மரைக்கார் வழிக்காவியம்.
14. யதார்த்தம் (கவிதை)
15. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் மூதூர் மீனவர்களின் உயர்ச்சி நாட்டம் ஆய்வு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

16. கவிஞர் மூதூர் எஸ். எல். எம். முகைதீன் கவிதைகளில் தலைமைத்துவத் தகைமைகள் - ஆய்வு.
17. எந்தன் ஊரே! (கவிதை)
18. வசந்தம் (கவிதை)
19. நண்பனை நவிலும் நா (கவிதை)
20. தங்கத்துரைக் காவியம்.
21. மஜீது மாகாவியம்.
22. அமீன் அருங்காவியம்.
23. படகு மூழ்கிய காவியம்
24. மூதூர் சுனாமிக் காவியம்
25. கவிஞர் மூதூர் எஸ்.எல்.எம். முகைதீன் கவிதைகளில் தாய்மை உணர்வுகள்
26. மூதூர் எம்.எம்.ஏ.அனஸின் நன்னெறிக்குறள்
28. சிறுவர் கவிப் பேழை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

என்னரும் மனைவியின் தாயார்

ஹாஜியானி ஜெஸிமா ஜவாப்தீன் அவர்கட்கு







Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிமணி அ.கௌரிதாசன் அவர்கள்
## உவந்தளித்த ஆசிப்பா

**உயில் எழுதி வைத்தான்**

❁ சாஜகான் - மும்தாஜ் மீதில்
சாகாக் காதல் கொண்டு
ஆசையாய்த் தாஜ்மஹாலை
அழகுறக் கட்டி வைத்தான்

❁ தமிழ்ஒளி "வானா ஆனா"
தன்னுயிர் வில்லிக் காக
அமிழ்தொத் தகாவி யத்தை
ஆவலாய் நிறைவு செய்தார்

❁ மாட்சிமை மிக்க அன்பு
மனைவிக் காய்அனஸ் தானும்
போற்றிடும் காவி யத்தைப்
பூரிப் பாய்ச்செய் தளித்தான்

❁ இனித்திட இன்ப வாழ்வு
இன்னுயிர் மனைவி யென்னும்
துணைவியே மூலம் ஆவாள்
துணைவனின் ஆடை யாவாள்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ கலவியாம் கடல் கடக்க
காரிகை தெப்ப மாவாள்
உலகினை வெற்றி கொள்ள
உத்தமி அமைச்ச ராவாள்

❁ அறுசுவை அடிசில் ஈயும்
அரிவையோர் அன்னை யாவாள்
பொறுமையைக் காக்கும் போதில்
பூமிக் குநிகராய் ஆவாள்

❁ வதுவைதான் செய்து நன்றாய்
வாழ்ந்திட் டஇல்ல றத்தில்
இதுவரை கண்ட தெல்லாம்
இனிதுறத் தீட்டி வைத்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

❁ இன்பம் துன்பம் தன்னில்
இணைந்துமே அன்றில் போலும்
அன்புடன் ஒன்றி வாழ்ந்த
அனைத்தையும் பாட்டில் தந்தான்

❁ வைத்திய சாலை தன்னில்
வருத்தமாய் இருந்த வேளை
ஒத்தா சைதந்த தெல்லாம்
ஒயிலாய்ப் பதிவு செய்தான்

❁ பரிவுடன் பேணிக் காந்த
பைங்கிளி ஜாபி றாவின்
உரிமைகள் தனக்கு மட்டும்
உயிலவன் எழுதி வைத்தான்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதாயினியின் பார்வையில்

மூதூர் எம்.எம்.ஏ அனஸ் அவர்களின் மனையாள் மாட்சிமைக் காவியம் என் கரம் கிடைத்ததும், அன்றே வாசித்து முடித்துவிட்டேன். மிக அருமையான ஒரு காவியத்தை அனஸ் அவர்கள் எழுதியுள்ளார்.

இன்று உலகத்தில் உள்ளங்கைத் தொலைபேசிகளுடன் அவரவர் தனித்தனி உலகத்தில் வாழும் இச்சூழலில் மனித உணர்வுகள் ஒருவருடன் ஒருவருக்கு இருக்கும் உரையாடலும், அன்பும் குறைவடைந்தே அதாவது கீழ்நிலைக்கே சென்று கொண்டிருக்கின்றது. இந்நிலையில் தனது மனைவியை, கணவனை, உறவுகளை பெற்றோரைக் கவனிக்காமல் பலரும் வேலைப் பழுவாலும், பல்வேறுபட்ட சுமைகளுடனும் அலைந்து திரிகின்றார்கள்.

இந்நிலை இப்படியிருக்க திரு.அனஸ் அவர்கள் தனது இல்லாளைப் பற்றிய மகிமையை, அன்பை, அவரது துணைவியின் இருப்பை, நேசத்தினை இத்தனை மேன்மையாக நான் எந்த இலக்கியத்திலும் கவிதையிலும் வாசிக்கவில்லை என்பேன்.

இறைஞ்சல் என்னும் பாடலில்

"என்னவள் என்றே யான
ஏந்திளை ஜாபிறா என்னும்
உன்னத தன்மை யாவும்
உரித்தெனக் கொண்ட மாதைக்

காவியமாகப்பாட இறைவனிடம் அருள் புரியுமாறு அவர் இறைஞ்சுதலைக் கண்டு நான் உள்ளம் நெகிழ்ந்து போனேன். தன்னரும் மனைவி பற்றிய கவிஞரின் எண்ணம் ஒரு தெளிந்த நதியில் பூரண நிலவு விழுந்ததைப் போன்றது. நிலவு வானத்திலா? இல்லை பூமியிலா? என்று நதியைப் பருகிக் கொண்டிருப்பவரின் சந்தேகத்தைப் போல அனஸ் அவர்களின் இக்காவியம் அற்புதமானது. நதியின் கரைகளில் ஒரு சிறு நாணலாக நின்று பிரமிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கவிஞர் அனஸ் அவர்கள் தன்முக உரையில் குறிப்பிடும்போது தன்னுடன் இருபத்தைந்து வருடங்கள் வாழும் துணைவியின் மேன்மையை மிகத் துல்லியமாக அறிந்துள்ளார். நானும் நினைத்தது போல இது எழுத்திலான ஒரு தாஜ்மஹால் என்று பின்னர் அவரின் முகவுரையில் அவரே குறிப்பிட்டது மிக ஆச்சர்யமாக இருந்தது.

தாஜ்மஹால் போல இதுவும் ஒரு அழியாத காவியம், அழியாத சின்னம் என்பேன் ஜாபிறாவுக்கு! இதில் எல்லாப் பாடல்களும் ஜாபிறாவாகிய இல்லாளைப் பற்றியே பேசுகிறது. இன்னுமொரு இடத்தில் கணவன் மட்டுமல்ல அவளது பிள்ளைகளும் அவளது மேன்மையை மெச்சுகிறார்களாம். அப்படியான பிள்ளைகளுக்கு அருமையான தாயாகிறாள்.

புனித பைபிளில் ஒரு வசனம் உண்டு. புத்தியுள்ள ஸ்திரி வீட்டைக் / கட்டுகிறாள். புத்தியில்லாத ஸ்திரியோ அதைத் தன் கரங்களால் இடித்துப் போடுகிறாள்.

இது எத்தனை உண்மை.

"நல்லதோர் மனைவி என்று
நாயகன் நானும் போற்ற
அல்லோ' அவனி தன்னில்
அழகுறத் திகழ்ந்து வாரார்
இல்லாள் தனுக்கு நல்ல
இலக்கண மென்றும் ஆனாள்

என திருமதி ஜாபிறாவை அவளது கணவன் கவிஞர் அனஸ் மெச்சும்போது, இதைவிட மேலான வார்த்தைகள் என்னிடம் இல்லை. எத்தனையோ கவிதைகளை கவிதை வடிவங்களை வாசித்தவள் என்ற வகையில் கவிஞர் அனஸின் மனையாள் மாட்சிமைக் காவியப் பாக்கள் மிக நேர்த்தியாக உள்ளது. தன் மனைவியின் மீது அவர் கொண்டுள்ள அன்பும், காதலும், பிரியமும் வற்றாத நதியைப்போல் விழுந்த வண்ணமே உள்ளது.

**நன்றி**

**கவிதாயினி எஸ்தர்**

**மனையகம்**



**காப்பியக் கதிரோன் எம்.எம். ஏ. அனஸ்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**வாசகியின் இதயத்தில் இருந்து....**

மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்த வரம்" என்னும் கவியரசின் கவிவரிகளுக்கேற்ப மாட்சிமை பொருந்திய மனையாளை நூலாசிரியர் பெற்றிருப்பது உண்மையிலேயே மிகப்பெரிய பேறுதான். இம்மனையாள் மாட்சிமைக் காவியத்துள் நான் புதைந்த போது என்னுள் பல கேள்விகள். இத்தகைய மாட்சிமையான பெண்மணி இந்த சமூகத்தில் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறாளா? கதைகளில் கேள்விப்பட்டதுண்டு. நானும் இவ்வாறு வாழ முயற்சிக்க வேண்டும். இவ்வாறு பல எண்ணங்கள்.....

உன்னை எந்தன் மனைவியென
உலகில் யானும் அடைவதற்கு
என்ன தவம்தான் செய்தேனோ!
ஏதன் கொடைதான் என்பேனோ!'

என்ற கவிதை வரிகள் மிக அற்புதமான வரிகளாய் இருக்கின்றது. ஒரு கணவனின் சிந்தையில் இத்தகைய உணர்வு தோன்றுவது ஓர் சாதாரண விடயமல்ல. இத்தகைய மனைவிக்காக வார்த்தைக் கற்களால் கவித் தாஜ்மஹாலை யாத்தது மிகச் சிறப்புக்குரிய காரியமாகும். காலத்தால் அழியாக் காவியமாக என்றும் இது புகழ் பெற்றுத் திகழும் என்பதில் ஐயமில்லை.

நற்குடியில் பிறந்து, நல்வித்தைகள் யாவும் பயின்று செல்வச் செழிப்புடன் வளர்ந்த தன் மனைவி, தனக்காக அனுபவித்த இன்னல்களை

"தன்னுடைய செல்வம் எல்லாம்
தந்துமே எனக்காய் வாழும்
என்னவள் இவளின் தியாகம்
எண்ணியான் ஏங்கு கின்றேன்
இன்னவள் இல்லை என்றால்
இன்னலில் துவள்வேன் நானும்"



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனும் கவிவரிகள் மூலம் கவிஞர் நூலாசிரியர் தனது உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்துகின்றார். இத்தகைய தியாகங்களை ஒரு மனைவி ஏற்கிறாள் என்றால் அவளது கணவன் நிச்சயம் அதற்குத் தகுதியுள்ளவராகத்தான் இருக்க வேண்டும்.

நூலாசிரியர் தனது மாட்சிமை பொருந்திய மனைவியின் புகழைக் கூற விளைந்து நல்ல கணவன் என்ற ஓர் புகழ் கிரீடம் ஒன்றை மறைமுகமாகத் தனக்குப் பெற்றுவிட்டார்.

"பெற்றான் பெறின்பெருவர் பெண்டிர் பெரும்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு"

இது பொய்யா மொழிப் புலவர் வள்ளுவரின் வாக்கு. ஆம் கணவனுக்குப் பணிவிடை செய்யும் பண்பும், கற்புக் குணமும் கொண்ட மனைவியை அடைந்தவர்கள் மறுமையில் மேலுலகம் எய்துவார்கள். இது பொய்க்கப் போவதில்லை. இவர்களது இல்லறம் நல்லறமாகத் தொடர இறைவன் என்றும் அருள் புரிவான். வாழ்க! மனையாள் மாட்சிமைக் காவியம் புகழோடு பெயர்பெற்று மண்ணில் நீண்டு நிலைபெறுவீர்கள் ஜாபிறா எனும் அன்னையே!

**திருமதி.கௌரிமலர் பிரணவேந்திரா**
**திருகோணமலை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கவிதாயினியின் கருத்துரை

ஈழத்து இலக்கியப் பரப்பில் தனக்கென்றோர் இடத்தைப் பிடித்துக் கொண்ட மூதூர் எம்.எம்.ஏ.அனஸ் அவர்கள் இதுவரை இருபத்தெட்டு நூல்களை பிரசவித்துள்ளார். இவற்றில் பல நூல்களை நான் வாசித்து இன்புற்றிருக்கிறேன். இவருடைய கவிவரிகள் யாவும் மிகவும் கருத்தாழமிக்கவை. "கம்பன் வீட்டுக் கட்டுத்தறியும் கவிபாடும்" என்பதற்குக் கவிஞர் அனஸ் சிறந்த உதாரணமாகும். இலக்கியப் பாரம்பரியக் குடும்பத்தில் ஜனனித்தவர். சீறாப்புராணம், பதுறுப் படலத்திற்கு உரை எழுதிய மூதூர் உமர் நெய்னார் புலவரின் புத்திரியின் புதல்வர். பிறப்பினிலேயே கவிஞராய்ப் பிறந்தவர்.

"ஒரு ஆணின் வெற்றிக்குப் பின்னால் ஒரு பெண் இருப்பாள்" என்பதற்கமைய இந் நூலாசிரியர் கவிஞரின் வெற்றிக்குக் காரணமாய் அவரது மனைவி ஜாபிறா அனஸ் இருப்பதை இக்காவிய நூலைப் படிக்கும்போது மிகத் தெளிவாகப் புரிந்து கொள்ளக்கூடியதாக இருக்கின்றது. "மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்" என்பார்கள். உண்மையில் இந்நூலாசிரியர் அவ்வரத்தை மிக உயர்வாகப் பெற்றிருக்கிறார் என்பதே உண்மை

"அறிவும் அழகும் அருங்குணமும்
அரும்பெரும் குடியின் பிறப்பதுவும்
நிறைவாய்ப் பெற்ற நங்கைநீ
நாயன் கொடையே எந்தனுக்கு"

எனும் கவி வரிகள் மூலம் தன் மனைவியின் ஏற்றத்தைக் கவிஞர் மிகச் சிறப்பாக எடுத்துக் கூறுகின்றார். இதிலிருந்து அவரின் வாழ்க்கைப் பயணத்திற்கு மனைவியின் மிக உயரிய பங்களிப்பையும் அறிந்து கொள்ளக்கூடியதாய் உள்ளது. ஆகவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"கட்டிய மனைவி தன்னைக்
கடுமையாய்ப் புகழுகின்ற
மட்டி மடயன் என்று
மாநிலம் உந்தன் மீதில்
திட்டினைச் சொரியும் என்று
தயக்கமேன்? கவிஞா உமக்கு

உண்மையை உரைத்ததற்காய்
உலகமே உன்னைப் போற்றும்
பெண்டிரின் பெருமை தன்னைப்
பகர்ந்திட்ட பாவலன் உனைப்
பாமாலை சூடி வாழ்த்துகிறேன்

தன் மனைவியின் சிறப்பை எடுத்தியம்பும் கவிஞர்

"புன்னகை முகத்தில் மேவும்
பூம்பொழில் வடிவம் கொண்டாள்
என்றுமே சோம்பிக் கிடக்க
எண்ணிய தில்லை அவளும்
நன்றிலா வார்த்தை ஏதும்
நாவினால் நவின்ற தில்லை

என்கின்றார். கவிஞருக்கு இவ்வாறான மனைவி அமையப்பெற்றது அவருக்குப் பெரும்பேறே என மிக உறுதியாய்க் கூறுவேன். அவரின் இல்லறம் நல்லறமாக அமைய என் இனிய வாழ்த்துக்கள்.

**நன்றி**

**கவிதாயினி ஜெனிறா**
**தௌபீக் கைறுல் அமான்**
**கிண்ணியா**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முகவுரை

ஒரு முறை நபிகள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் "ஒரு மனிதனுக்கு உலகில் கிடைக்கக் கூடிய பெரும் செல்வம் எதுவெனக் கேட்கப்பட்ட போது அவனுக்குக் கிடைக்கும் நல்லொழுக்கமுள்ள மனைவி" என்று கூறினார்கள். இத்தகு மகிமை பொருந்திய மனைவியைப் பெறுவது இறைவனின் பேறுகளில் பெரும்பேறாக இருக்கின்றது.

மூதூரின் இலக்கியங்களில் தங்கள் மனைவிகளை கருப்பொருளாகக் கொண்டு நம் முன்னோர்களால் இருபெரும் இலக்கியப் படைப்புக்கள் உருவாக்கப்பட்டுள்ளன.

அதில் ஒன்று மூதூரின் இலக்கிய முன்னோடியும் என் முப்பாட்டனாருமாகிய புலவர் சாலயர் (முஹியத்தின் புலவர்) ஆகும். அவர் தன் மனைவியை அழைத்துச் சென்று மகாவலி கங்கை மூதூர்க்கடலில் சங்கமிக்கின்ற அழகுறு காட்சியை ஒவ்வொன்றாகச் சுட்டிக்காட்டி, தன் மனைவியின் மகிமையையும் கூறிக்கூறி, ஓர் காவியமாகப் பாடினார். அவை தான் " கங்கைக் காவியம்" என்றழைக்கப்படுகின்றது. இக்காவியம் மூதூரின் இலக்கிய முதுசமாகப் போற்றப்படுகின்றது.

மற்றைய நூல் மூதூரின் மாபெரும் எழுத்தாளர் மறைந்த வ.அ. இராசரத்தினம் அவர்களின் " ஒரு காவியம் நிறைவு பெறுகின்றது." என்ற நாவலாகும். இதில் அவர் தன்னருமை மனைவி திருமதி. லில்லி ஆசிரியையின் அருங்குணங்கள், ஆற்றல் அனைத்தையும் ஒரு பெரும் நாவலாக எழுதினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எனக்குக் கவித்துவப் புலமை உள்ளதென்பதற்காக இந்த "மனைவி மாட்சிமைக் காவியத்ததை" நான் எழுதவில்லை. மாறாக கவித்துவப் புலமையுள்ள ஒருவனுக்கு ஓர் உன்னதமான மனைவி உரித்தென்று ஆகிவிட்டாளே என்று உவகைப் பெருக்கின் உயரிய நோக்கோடு தான் இக் காவியத்தைப் படைத்துள்ளேன் என்பதையும் வாசகர்களுக்குத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அந்த வகையிலே இன்று இதுவரையில் என்னுடன் இருபத்தைந்து வருடங்கள் இல்லற வாழ்வில் சங்கமித்து வரும், என்னன்பு மனைவி ஜாபிறா அனஸின் உன்னத தன்மைகள், குணநலன்கள், நடத்தைகள் அனைத்தையும் அதிகம் அறிந்தவன் அவளின் கணவனாகிய நான்தான். ஆம் பாம்பின் காலை பாம்புதான் அறியும் என்பார்கள். ஆதலால் நான் ஓர் கவிஞன் என்ற வகையிலே அவளுக்கான ஓர் தாஜ்மஹாலை "மனைவி மாட்சிமைக் காவியமாக" வெளிக்கொணர்வதில் மகிழ்ச்சியுறுகின்றேன்.

நன்றி.

எம்.எம்.ஏ.அனஸ்
02.10.2019

மட்டக்களப்பு வீதி,
பெரியபாலம்,
மூதூர் – 05.
தொடர்பு – 0776288299



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையாள் மாட்சிமைக் காவியம்

## இறைஞ்சல்

என்னவள் என்றே யான
ஏந்திழை ஜாபிறா என்னும்
உன்னத தன்மைகள் யாவும்
உரித்தெனக் கொண்ட மாதை
நன்கெனப் பாட நானும்
நாட்டமே கொண்டேன் இறைவா!
இன்னதற் கென்இத யத்தை
இன்தமிழ்க் கடலென் றாக்கு!

## அவையடக்கம்

கட்டிய மனைவி தன்னைக்
கடுமையாய்ப் புகழு கின்ற
மட்டி மடையன் என்று
மாநிலம் எந்தன் மீதில்
திட்டினைச் சொரியும் என்று
தெரிந்துமே உள்ளேன் நானும்
கிட்டிய பேறாம் இவளின்
கீர்த்தியைப் பகரும் போதில்
விட்டிட மாட்டார் வீணர்
வசையினைப் பொழிவர் தானே!
பட்டிடத் தயாரே ஆகிப்
பகர்கிறேன் அவளைப் பாவாய்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காப்பு

என்னவள் தன்னை யானும்
எழிலுடன் மனையாள் மாட்சிமை
என்றிடும் காவியம் தன்னால்
எழுதிட வாஞ்சை கொண்டேன்.
இன்னதில் பிழைகள் ஏதும்
இருந்திடா வண்ணம் காக்க,
மன்னவன் இறையைக் கேட்டேன்.
மாபெரும் காப்பும் அவனே!

## நகர் வாழ்த்து

செந்நெல் விளைநற் களனிகளும்
சிறப்பாம் முக்கனித் தோப்புகளும்
விந்தை மிக்க வளநதியும்
வரமாம் மீன்கள் நிறைகடலும்
சொந்தம் என்றே பெற்றிலங்கும்
செல்வக் களஞ்சிய ஊர்தானே!
இந்த நாட்டில் மூதூரென
இனிதே எங்கும் இயம்பிடுவோம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கங்கைக் காவியம் பாடியதால்
கனத்த புகழைக் கண்டிட்ட
தங்கப் புலவன் சாலயரைத்
தந்த பதியும் மூதூரே!
இங்கனம் தமிழின் செழுமைக்காய்
இனிதாம் புகாரிக் காவியத்தை
பங்கமில் முறையாய்ப் பாடிட்ட
புலவர் உமர்பதி யும் மூதூர்(ரே)

சிறுகதை நாவல் தன்னாலே
சீரிய புகழை நாட்டினிலே
பெரிதாம் அளவு பெற்றிட்ட
பெரியார் வ.அ. இராசரத்தின(மும்)
தரித்ததும் மூதூர் மண்ணிலதால்
தமிழின் உலகில் மூதூர்க்கு
உரித்தாம் பெரிதோர் இடமென்று
உரைத்தே நாமும் மகிழ்வோமே!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அருள்மறை குர்ஆன் வழிமுறையில்
அரும்பெரும் வைத்திய மேதையெனப்
பெருமை நாட்டில் பெற்றிட்ட
பெரியார் அப்துல் ஜபாராலிம்
பிறந்ததும் மூதூர் மண்ணில்தால்
பெருமை இந்தப் பதிதனுக்கு
பெரிதாம் அளவில் உண்டென்று
புரிந்தே நாமும் பகர்வோமே!

உன்னத தலைமை தன்னாலே
ஊருக் குயர்வை உரித்தாக
அன்று தந்த பெரியாராம்
ஆன வாப்பு மரைக்காரும்
அன்னார் மைந்தன் என்றான
அருமைச் செய்லாக் காசிம் மரைக் (காரும்)
தன்னுடை மைந்தன் எனும்பேற்றில்
திகழ்வதும் மூதூர் பதியேதான்.

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## காவியம்

என்னரும் மனைவி யான
எழில்மிகு ஜாபிறா தன்னின்
உன்னத தன்மை யாவும்
ஒவ்வோர் கணமும் என்னில்
அன்றோ! நினைவில் வந்து
அகமகிழ் வளித்து நிற்க
அன்னதை யானும் இங்கே
அறைகிறேன் பாவாய் அன்றோ!

தன்னரும் மனைவி யான
தாரகை மும்தாஜ் மீதில்
உன்னத காதல் கொண்ட
உயர்வுறு மன்னன் ஷாஜஹான்
அன்னதாம் காதல் தன்னை
அகிலேமே புரியும் வண்ணம்
இன்னரும் தாஜ்மஹால் என்று
இப்பதி நிலைக்கச் செய்தான்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னரும் மனைவி மீதில்
தனிப்பெரும் அளவே இல்லா
அன்பதைப் பொழிந்து நிற்கும்
அனசெனும் கவிஞன் யானோ!
என்னதான் செய்வோம் இந்த
ஏந்திளை நினைவாய்ப் புவியில்
என்றுமே எண்ணி யேங்கி
ஏற்றதோர் முடிவும் கண்டேன்.

செந்தமிழ் வார்த்தை என்னும்
செம்மணிக் கற்கள் கொண்டு
எந்ததாம் அழிவும் இன்றி
என்றுமே நிலைக்கும் வண்ணம்
தந்திடத் துணிந்தேன் யானும்
தக்கதோர் காவியத் தாஜ்மஹா(லை)
இந்ததாம் எந்தன் நோக்கே
இப்பெரும் காவியமாகும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்துல் லத்திப் காஜியின்
அருந்தவப் புதல்வி யான
ஒப்பிலா உயர்வு கொண்ட
உத்தமி ஜெஸிமா தனுக்கும்
இப்பதித் தலைவர் செய்லாக்(காசிம்)
இவர்மகன் ஜவாப்தீன் தனுக்கும்
அப்போ புதல்வி என்று
ஆனவள் ஜாபிறா வாகும்.

ஆண்டா யிரத்தித் தொழாயிரம்
அதனுடன் எழுபத் தைந்தின்
மாண்புறு சித்திரை பதினொன்(றில்)
மண்ணதில் மலர்ந்தாள் இவளும்
காண்பவர் வியக்கும் நல்ல
கவினுறு நெறிகள் பற்றி
நாண்மிகை மிக்க நங்கையாய்
நாணிலம் வளர்ந்தாள் அன்றோ!




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மூத்த பதியாம் மூதூர்
முதுசமாய்த் திகழு கின்ற
பூத்தநற் புகழும் கொண்ட
பெரியார் வாப்பு மரைக்கார்
காத்ததாம் குடியில் பிறந்த
காரிகை ஜாபிறா எனுமிவள்
நீத்தார் பெருமை கொண்ட
நல்லரும் பேறும் பெற்றாள்.

தாய்வழி தன்னில் இந்தத்
தாரகை ஜாபி றாவும்
தூய்மையாம் இஸ்லாம் மார்க்கம்
தெளிவுறக் கற்றுத் தேர்ந்த
வாய்மையின் ஆலிம் குலத்தின்
வழியினில் தோற்றம் பெற்றாள்
ஆய்ந்திடில் அரும்சிறப் பனைத்தும்
அழகுறப் பிறப்பில் பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெரிய பாலம் மூதூர்
பசுமைச் சூழல் மிக்க
சிறப்புறு பகுதி தானே!
சங்கையின் மங்கை இவளும்
பிறந்ததாம் பகுதி என்ற
பெருமையைப் பெற்ற தம்மா!
நிறைவுறப் பெற்றோர் பேண
நிலமிசை வளர்ந்தாள் இவளும்

அல்மினா என்னும் மூதூர்
அழகுறு பள்ளி தன்னில்
அல்லோ அவளும் கற்று
ஆரம் பக்கல் வியில்தேர்ந்(தார்)
கல்வியின் ஆறாம் ஏழாம்
காத்திர வகுப்புக் கல்வியை
நல்முறை யாக அந்நஹ்ரார்
நாடியே சென்று கற்றாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மடவெல மதினா மத்திய
மாகலைக் கூடம் தன்னில்
அடுத்ததாம் எட்டாம் ஒன்பதாம்
ஆண்டுக் கல்வி தன்னைப்
படித்துமே பூர்த்தி செய்தாள்.
பின்னவர் கொழும்பு சென்று
படித்தார் பத்தாம் பதினொரம்
படிப்பினை பாத்திமாப் பள்ளியில்.

உயர்தரக் கல்வி தன்னை
உவப்புடன் மூதூர் மீண்டு
பெயருடை அந்நஹ்ஹார் பள்ளியில்
படித்துமே நிறைவு செய்தாள்.
முயன்றவள் சமையல் கலையும்
முக்கிய தையல் முறையும்
இயன்றதாம் அளவில் கற்று
இன்னதில் தேர்ச்சி பெற்றாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருமுறை குர்ஆன் தன்னை
திறம்பட ஓதும் நல்ல
முறையிலும் கற்றுத் தேர்ந்தாள்.
முக்கிய அறிவும் பெற்றாள்.
நிறைவுறு வாழ்வுக் காண
ஞானமும் நிறையப் பெற்றாள்.
சிறப்புறு மங்கை என்ற
சீரிய புகழும் பெற்றாள்.

ஈர்எட் டுவயதில் அன்று
இருந்ததாம் இவளைக் கண்டு
ஆர்இவள் என்றே ஆய்ந்து
அவளினில் ஆசை கொண்டேன்
பார்தனில் எந்தன் வாழ்வு
பேர்பெறும் இவளால் என்று
தேர்ந்துமே நின்றேன் நானும்
தவறவே இல்லை ஈது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வு தன்னில்
இன்னரும் இன்பம் காண
நல்லதோர் நாயகன் என்று
நாடியே என்னை மணந்தாள்.
நல்லதோர் பேறு என்று
நானுமே மெச்சும் வண்ணம்
நல்லறம் என்றே இந்த
நங்கையும் வாழ்வு கண்டாள்.

என்னரும் காதல் தன்னை
ஏகனும் நலவே என்று
அன்றோ! ஆக்கி விட்டான்
அருளினைச் சொரிந்து விட்டான்.
இன்னரும் வாழ்வாய் ஈது
இலங்கிட வகையும் செய்தான்
என்னுடை வாழ்வில் இந்த
ஏந்திளை பேறே என்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னத தன்மை தன்னில்
உயர்வுற் றோங்கி நிற்கும்
என்னரும் இல்லாள் இவளோ!
ஏகனின் கொடையே எனக்கு
என்நலம் என்றே வாழும்
ஏந்திளை இவளின் தியாகம்
எண்ணியான் ஏங்கு கின்றேன்.

தன்னுடை செல்வம் எல்லாம்
தந்துமே எனக்காய் வாழும்
என்னவள் இவளை யானும்
என்னுடை இதயம் என்பேன்.
உன்னத தன்மை யோடு
உயர்வுறு அழகும் கொண்ட
இன்னவள் இல்லை என்றால்
இன்னலில் துவல்வேன் நானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அறிவுடன் குணமும் கொண்ட
அரிவையாம் இவளும் வாழ்வில்
நெறிமுறை தவறி நடந்த
நிகழ்வதோ இல்லை யம்மா!
மறைநெறி பகரும் வண்ணம்
மாண்புறு நடத்தை கொண்டாள்.
கறையினைக் கனவில் கூடக்
கண்டிடும் தன்மை யற்றாள்.

தன்னரும் உறவு தனையும்
தகுமுறை பேணிக் காக்கும்
நன்றாம் குணமும் கொண்ட
நாயகி என்பேன் இவளை
இன்னலை நல்கும் நோயில்
இருந்திடும் பொழுதில் எல்லாம்
நன்முறை என்னைப் பேணி
நடந்திடும் நங்கையும் ஆவாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைவழி ஒழுகும் நல்ல
மாண்புறு மாதும் ஆவாள்.
நெறிமுறை காத்து வாழும்
நல்லரும் பண்பும் கொண்டாள்
வறியவர்க் கீயும் நல்ல
வனப்புறு குணமும் மிக்காள்
சிறப்பினில் சிறப்பே என்றென்
சிந்தையில் நிறைந்து கொண்டாள்.

கறையது மில்லா நல்ல
கண்ணிய ஒழுக்க மிக்காள்
நிறைவுறு தன்மை யாவும்
நிறைந்ததாம் நங்கை யாவாள்
குறையது அவளில் காண
கொஞ்சமும் முடியா தென்பேன்.
இறைவனின் பேறாய் அவளை
இதயமே நிறைத்துக் கொண்டேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புன்னகை முகத்தில் மேவும்
பூம்பொழில் வடிவம் கொண்டாள்.
என்றுமே சோம்பிக் கிடக்க
எண்ணிய தில்லை அவளும்
நன்றிலா வார்த்தை ஏதும்
நாவினால் நவின்ற தில்லை
இன்னதாம் பண்பு தன்னின்
இருப்பிடம் இவளே யம்மா!

பிறரின் குறைகள் பற்றி
பகரவே மாட்டாள் என்றும்
சிறுமைச் செயல்கள் ஏதும்
செய்தது மில்லை வாழ்வில்
திறமைகள் பலவும் அவளில்
தங்கியே இருக்கக் கண்டேன்.
சிறப்புறு பெண்ணாம் இவளால்
சீவியம் மகிழ்வே எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சிறப்புத் தேர்ச்சி தன்னை
சமையல் கலையில் பெற்றாள்
விரும்பும் உணவு வகைகள்
விதவித மாகச் செய்வாள்
கருவினில் திருவே பெற்ற
காரிகை இவளோ எனக்கு
பெருமொரு கொடையே என்று
பாரினில் பகர்வேன் யானும்.

மறையது மொழியும் வண்ணம்
மாண்புறு நடத்தை கொண்டாள்
இறைவனைத் தினமும் பணியும்
இன்னரும் வழக்கம் கொண்டாள்
நிறைவுறு மங்கை இவளை
நினைக்கையில் மகிழ்வு என்னில்
பெருக்கெடுத் தோடு கின்ற
பாங்கினைப் பகர வொண்ணா.
இருகர மேந்தி எனக்காய்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இறையிடம் இறைஞ்சி நிற்பாள்.
வருத்தமே எனக்கு வந்த
வேளையில் வருந்தி நின்றாள்
பரந்ததாம் நோக்கும் கொண்ட
பாவையாம் இவளைப் பற்றி
அறைகையில் புவியும் இவளை
அதிசயம் என்றே புரியும்.

உயரிய உள்ளம் கொண்ட
உத்தமி இவளே எந்தன்
துயரெல்லாம் நீங்கிப் போகத்
துணையென ஆனாள் அன்றோ!
நயமுடன் கதைக்கும் நல்ல
நாயகி இவளின் தன்மை
வியப்பினிற் குரிய தென்று
விதப்புரை செய்வேன் யானும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னல் அதிகம் எனக்காய்
இப்பதி தாங்கி வாழும்
என்னவள் தன்னை யானும்
என்றுமே மறக்க வொண்ணா.
தன்னுடை வாழ்வு தன்னை
தனிப்பெரும் தியாகம் என்று
அன்றோ எனக்கீந் துவாழும்
அவளென் பேறே ஆகும்.

தியாகம் என்ற சொல்லின்
திருவுரு இவளே எந்தன்
உயர்ச்சிக் குரித்துடை யாளெனும்
உன்னதம் மிக்காள் என்பேன்.
வியப்புறு இவளே எந்தன்
வாழ்வின் வசந்தமும் என்பேன்.
உயர்வுறு பெண்ணாம் இவளால்
உவகையே வாழ்வில் எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இல்லற வாழ்வு தன்னின்
இலக்கணம் என்றே யான
நல்லற நங்கை இவளை
நானும் என்செல் வமென்பேன்
அல்லலே எனக்கு அணுகா
அரணென ஆன இவளால்
அல்லோ! எந்தன் வாழ்வு
அர்த்தமாய் ஆன தன்றோ.

பிறப்பினில் சிறப்பே பெற்ற
பெண்ணிவள் எந்தன் பேறாய்
சிறப்புறப் போற்றி நிற்பேன்.
சிந்தையில் நிறைத்தும் கொண்டேன்.
நிறைவுறு குணங்கள் கொண்ட
நங்கையாம் இவளில் நானும்
குறையெனக் குறித்துக் கூறக்
கொஞ்சமும் முடியா தன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாப்பு மரைக்கார் வழிமுறை
வாரிசு என்னும் பேறும்
பாட்புனை புலவர் உமர்நெய்(னார்)
பரம்பரைப் பிறப்புச் சிறப்பும்
தோப்புடன் கமத்தின் போடிக்(குல)
தோன்றலாம் கவிமுகம் மதுமுகை(தீன்)
மூப்படை சதக்கு லெவ்வையின்
மாண்புறு வழித்தோன் றலென்றும்.

அருள்மறை குர்ஆன் தன்னை
அழகுறக் கற்றுத் தேர்ந்த
பெருமொரு அப்துல் ஜபாரா(லிம்)
பெரியார் லத்தீப் ஹாஜியின்
சிறப்புறு ஆலிம் குலத்தின்
சந்ததி என்றும் இவளும்
நிறைவுறு சேய்கள் நான்கை
நிலமிசை ஈன்றெடுத் திட்டாள்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பஸ், அஸாம், அஸ்மல்,
அம்னா ஆனோர் இவர்கள்
உன்னத தாயாம் இவளின்
உதரப் பிறப்பு ஆகும்.
நன்முறை ஒழுக்கம் ஞானம்
நாளுமே ஊட்டி இவளும்
தன்னுடை சேய்கள் தன்னைத்
தரமுடன் காத்தும் வாறாள்.

தங்களின் முன்னோர் போன்று
தாங்களும் ஊர்க்கு உதவும்
பங்கமே இல்லா நல்ல
பெரியோர் என்றே திகழவும்.
மங்காப் புகழது காணவும்
மன்னவன் இவளுடை சேய்க்கெல்லாம்
வங்கக் கடலாய் அருளினை
வழங்கிட வேண்டு மன்றோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றதாம் சேய்கள் மெச்சும்
பாங்குறு தாயும் ஆவாள்
உற்றார் உறவார் உறவை
உயர்வுறக் காக்கும் நல்லாள்.
கற்றதாம் அறிவின் ஊடே
காசினி ஞானம் எல்லாம்
பெற்றதாம் பெண்ணே என்றும்
போற்றியே புகழ்வேன் இவளை.

நல்லதோர் மனைவி என்று
நாயகன் நானும் போற்ற
அல்லோ! அவனி தன்னில்
அழகுறத் திகழ்ந்து வாரார்.
இல்லாள் தனுக்கு நல்ல
இலக்கண மென்றும் ஆனாள்.
சொல்லிட முடியாச் சிறப்பின்
சொந்தக் காறியும் அன்றோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

அன்பே! எந்தன் ஆருயிரே!
அழகின் அழகாய் ஆனவளே!
என்றும் எந்தன் உள்ளத்தில்
ஏற்றம் என்றே நிறைந்தவளே!

கண்ணே எந்தன் கனிரசமே!
காதல் தன்னின் கருவிடமே!
உண்மை அன்பின் ஊற்றிடமே!
உலகின் இன்பப் பொக்கிசமே!

உந்தன் நினைவு எந்தனது
உளத்தில் நதியாய்ப் பாய்கிறதே!
எந்தக் கணமும் உன்உருவே!
எந்தன் கண்ணில் தெரிகிறது.

உண்மை அன்பின் உறைவிடமாய்
உலகில் உன்னைக் காண்கின்றேன்.
எண்ணம் எல்லாம் நீதானே!
என்னில் நிறைந்து உள்ளாயே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னை எந்தன் மனைவியென
உலகில் யானும் அடைந்ததற்கு
என்ன தவம்தான் செய்தேனோ!
ஏகன் கொடைதான் என்பேனோ!

இல்லாள் என்ற வார்த்தைக்கு
இலக்கணம் நீயும் ஆனாயே!
அல்லோ! உந்தன் மகிமைக்கு
அரிவையர் அரிதே என்பேனே!

நோயும் எனக்கு நேருகையில்
நன்கே என்னைப் பேணுகிறாய்.
ஆய பணிகள் அத்தனையும்
ஆற்றி அகமும் மகிழ்கின்றாய்.

நேயம் என்மேல் மிகையாக
நாளும் நன்கே காட்டுகிறாய்
தூய அன்பின் உறைவிடமாய்த்
துலங்கி எந்தன் மகிழ்வானாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வறுமை என்னை வாட்டுகையில்
வசந்தம் என்றே ஆகின்றாய்
பொறுமை பேணி வாழ்வதனால்
பொன்னே போன்று மிளிர்கின்றாய்.

அறிவும் அழகும் அருங்குணமும்
அரும்பெரும் குடியின் பிறப்பதுவும்
நிறைவாய்ப் பெற்ற நங்கை நீ
நாயன் கொடையே எந்தனுக்கு.

பெண்ணே நீயும் இல்லையெனில்
புவியில் எந்தன் வாழ்வதுவும்
கண்ணீர்க் கதையின் கோலம்தான்
கவலை தன்னின் காட்சியேதான்.

எந்தன் இதயப் பொய்கையிலே
என்றும் தாவும் நீரலையாய்
அந்தோ! நீயும் ஆகிட்டாய்
அனைத்தும் எனக்கு நீயானாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நீயும் மனைவி ஆகியதால்
நிம்மதி நிறையப் பெற்றிட்டேன்.
பாயும் நதியாம் உன்னாலே
பசுமையென் வாழ்வில் நிறைகிறது.

என்னைப் புரிந்து நடப்பதனால்
ஏற்றம் எனக்கென்ற் றானாயே!
உன்னை யானும் அடைந்ததற்கு
உரிய பகரம்? என்செய்வேன்.

என்னைக் கணவன் என்றாக்கி
எத்தனை இன்னல் ஏற்றிட்டாய்
உன்னத உந்தன் நிலையெண்ணி
உள்ளம் நிறைவே அடைகின்றேன்.

உண்மை அன்பின் உறைவிடமாய்
உலகில் நீயும் வாய்த்ததனால்
மண்ணில் எந்தன் உயர்வினது
மகுடம் நீதான் என்பேனே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்தன் மனைவி என்றேதான்
எனக்கு பேறாய் ஆனதனால்
எந்தத் துயரும் எனக்கில்லை
எல்லா வசந்தமும் நீதானே!

உன்னை நினைக்கும் போதினிலே
உவகை உளத்தில் பொங்கிறதே!
என்னுடை வாழ்வு வளமெல்லாம்
என்றும் நீதான் என்பேனே!

இறையின் பேறு என்றேதான்
இப்பதி மீதில் எனக்கானாய்
நிறைவே உன்னால் காண்கின்றேன்.
நிம்மதி வாழ்வில் அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

கண்ணே எந்தன் காரிகையே!
களிப்புறு வாழ்வின் கருவிடமே!
மண்ணின் பேறே! மகத்துவமே!
மாதர் குலத்தின் மரகதமே!
எண்ணம் எல்லாம் நீயென்றே!
என்னில் நிறைந்து போனாயே!
பண்புகள் யாவின் பாசறையும்
பாரினில் நீதான் ஆனாயே!

உன்னை எந்தன் மனையாளாய்
உலகில் யானும் அடைந்ததற்கு
என்ன தவம்தான் செய்தேனோ!
ஏகன் இறையின் கொடைதானோ!
உன்னதம் எனக்கு உரித்தென்று
உலகினில் ஆக வழிசெய்தாய்
இன்னலும் அதிகம் எனக்காக
இப்பதி தன்னில் தாங்கிட்டாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வேறு

அன்னவள் ஈன்ற எந்தன்
அருந்தவச் சேய்கள் எல்லாம்
இன்னரும் ஞானம் பெற்று
இப்புவி சிறந்து வாழி!
இன்னலும் நோயும் இன்றி
இனிது நீண்டு வாழி!
நன்னெறி நடந்து நாயனின்
நல்லருள் பெற்றும் வாழி!

என்னரும் மனைவி ஜாபிறா
ஏகனின் அருளே பெற்று
நன்றென நிலத்தில் வாழி!
நோய்பிணி இன்றி வாழி!
என்றுமே இளமை குன்றா
எழிலுடன் இனிதே வாழி!
உன்னத நலமாய் நீண்டு
உலகினில் வாழி! வாழி!

*******



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாள் மாட்சிமைக் குறள்

- இறையெனக் கீந்திட்ட இன்னரும் பேறாய்
  நிறைந்தவளென் இல்லாள் நிலத்து.

- கறையிலா வாழ்வினால் கண்ணியத்தில் ஓங்கிச்
  சிறப்புற்றாள் என்னவள் செப்பு.

- நான் பெற்ற பேறுகளில் நற்பேறென் நாயகியே
  தான்என்பேன் என்றுமே தேர்ந்து.

- இல்லாள் எனும் சொல் இலக்கணமாய் என்னவளை
  அல்லோ! அடக்கிய தாய்.

- நல்லரும் நாயகியாய் நானுமென் இல்லாளைச்
  சொல்லி யடைவேன் சிறப்பு.

- உன்னதமாம் தாயும், உயரியதாம் தாரமும்
  என்னவள் தானே எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பிறப்பினிலே நற்சிறப்புப் பெற்றவளென் இல்லாள்
  அறிந்துற்றேன் இன்பம் அகத்து.

- எனக்காக என்னவளும் ஏற்றிட்ட இன்னல்
  கனத்தினில் மாபெரிதாம் காண்.

- என்வாழ்வின் எல்லாமும் என்னருமை நாயகிதான்
  என்றிடுவேன் எங்கும் எடுத்து.

- கணவனென் மீதில் கனபெரும் அன்பை
  மனதில் நிறைத்தவளென் மாது.

- கண்ணின் மணியாய்க் கருதியெனைக் காத்திடும்
  பெண்ணவளே என்இல்லாள் பேசு.

- தன்செல்வம் யாவையும் தந்தெனக் கென்இல்லாள்
  உன்னதத்தில் ஓங்கினாள் ஓது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மனையாள் மாட்சிமை வெண்பா

இல்லறச் சோலையின் இன்பப் பெருக்கென
நல்லறத் தெந்தனது நாயகியைச் - சொல்லியான்
ஆனந் தமடைகிறேன் அன்னவள் எந்தனுக்கோ
தானவன் பேறாகும் தான்.

எந்தனது வாழ்வின் எழில்மிக்க ஏற்றமெலாம்
வந்தமைந்த இல்லாளால் வந்ததெனில் - விந்தையில்லை
அன்னவளால் நானுறும் ஆனந் தமதிகம்
என்றேதான் சொல்வேன் எடுத்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உன்னதமாம் பண்பும் உயரியதாம் சிந்தையும்
நன்றெனக் கொண்டயென் நாயகியின் - தன்மையால்
எந்தனது வாழ்வினில் ஏற்றமே கண்டிட்டேன்
தந்தா னவளையிறை தான்.

இறைவன் எனக்குமே ஈந்ததாம் பேற்றில்
நிறைவுறு வாழ்வை நிலத்தில் - சிறப்புறப்
பெற்றிட நாடியே பெண்ணவள் ஜாபிறாவைப்
பற்றிடச் செய்தான் புரி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இல்லறச் சோலையின் இன்பப் பெருக்கு

- என் இல்லறச் சோலையில்
  இன்ப நதியாய்ப்
  பெருக்கெடுத்தோடிக் கொண்டிருக்கும்
  என்னன்புத்தாரம் ........ஜாபிறாவே!

- என் நெஞ்சில்
  நேசமாய் நிறைந்துபோன
  உன்னைப் பற்றி நான் எழுதும்
  வெறும் வார்த்தைகள் அல்ல இது
  உன் வாழ்வை விதப்புரை செய்கின்றன.

- என் ஒவ்வோர் வார்த்தைகளும்
  உன்னத மனைவியாகிய உனக்கு
  அணிகலனாய் ஆவதால்
  அவ்வார்த்தைகள் தன்னையே
  அலங்கரித்துக் கொள்கிறது.

 

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- இது ... உலகுள்ளவரை
  உன் நாமம்
  வாழவேண்டுமென்பதற்காக
  வார்த்தைக் கற்களால்
  நான் அமைத்த
  ஓர் காவியத் தாஜ்மஹால்.

- என் நலனுக்காக
  உன்னையே .....
  தியாகமாக்கிக் கொண்டிருக்கும்
  அதிசயப் பிறவி .....நீ.

- உன்னன்புக்கு நான்
  ஆட்பட்டுப் போனதை
  அருட் கொடையாகவே
  அர்த்தம் கொள்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன் அன்பு
  வசந்தத்தின் வாசனையாகவே
  என் உளமெங்கும்
  சுகந்தத்தை வருசித்தக் கொண்டிருக்கிறது.

- என் காதல் சிகரத்தில்
  ஊற்றெடுத்த நதிநங்கையே! நீ
  என்னில் சங்கமமாகியதால்த்தான்
  இன்றும் நான்
  இன்பத்தின் பிரளயமாய் இருந்து கொண்டிருக்கிறேன்.

- பேரின்பத்தின் பிறப்பிடமாய்
  என்றும் நான்
  உன்னைத்தான்
  பறைசாற்றிக் கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அன்புச் சாகரம் உன்னில்
  மூழ்கியதனால்த் தான்
  இன்பத் தூய்மையாய்
  இருந்து கொண்டிருக்கிறேன்.

- என் உயிர்ப்பாகவே
  உன்னை நான்
  உணர்ந்து கொண்டிருக்கிறேன்.

- இயற்கையின் இரகசியத்தின்
  ஆசிரியையும்
  எனக்கு நீதான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாலிபத்தின் வசந்தம்
என்றுதான் உன்னை நான்
விளங்கிக் கொண்டிருந்தேன்.
இன்று......
முதுமையில் முதுசமும்
நீதான் என்பதைப் புரிகிறேன்.

- அன்பின் உறைவிடம்
நீதான் என்பதை
நிதர்சனமாகவே
உணர்த்திக் கொண்டிருக்கிறாய்.

- உன்னுடைய
புன்னகையில் கூட
நான் புத்தெழுச்சி அடைகின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- வாழ்க்கை வனத்தில்
  தனிமரமாய் நின்ற என்னை
  வளமிக்க தோப்பாய்
  வடிவமைத்தவள் நீதானே!

- என் வாழ்க்கைச் சோலையில்
  உன் உறவு மலர்
  புஷ்ப்பிக்காதிருந்தால்
  இன்றும்…அது
  இன்னல்களாலேயே
  வாழ்த்துரைக்கப்பட்டுக் கொண்டிருக்கும்.

- என்னன்பு மனைவியே!
  நீ விரும்புவது கூட
  என் விருப்பத்துக்குரியதாய் ஆகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• நீ... கதைக்கும் போதுதான்
வார்த்தைகளின் வசீகரத்தைக் கூட
என்னால் புரிய முடிகிறது.

• என் இன்னலின் விடுதலை யாவும்
உன் அரவணைப்பால்த்தானே!
ஆகிக் கொண்டிருக்கிறது.

• அடி பணிதலை
நான் அறிந்து கொண்டதெல்லாம்
உன் அன்புக் கட்டளைகளால்த்தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- எவருக்கும்
  அடங்கிப் போகாதிருந்த நான்
  உன் ஆணைக்கு மட்டும்
  அடங்கிப் போகும்
  அர்த்தம்தான் என்ன!

- என் இதயத்தை
  உன் இருப்பிடம் ஆக்கிக் கொண்டதால்
  என் உயிர் கூட
  நீ... என்றே நினைக்கத் தோன்றுகிறது.

- சந்தோசச் சிகரத்தில்
  நான் சஞ்சரிக்க
  எனக்கு...
  ஏணியாய் இருப்பதும்
  நீ.. தானே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என் இதயப்பரப்பில்
விதையாய் வீழ்ந்து
வாழ்வு விருச்சமாய் வியாபித்தாய்
அதனால்த்தான் .... நான் இன்று
வசந்தத்தின் அரவணைப்பில்
இருந்து கொண்டிருக்கிறேன்.

- அழகுக்குக்கூட
நான் உன்னைத்தானே
அர்த்தமாய்க் கொண்டிருக்கிறேன்.'

- வடிவுக்கும்
உன்னைத்தானே
வர்ணிக்கின்றேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- கவர்ச்சியின் கருவாக
  உன்னைத் தானே
  காண்கிறேன்.

- உன் அழகை
  அங்கலாய்ப்பது கூட
  எனக்குச் சுகந்தம்
  என்றாகிவிட்டது.

- இறைவனின் கலை இரசனையின்
  பிரதிபலிப்பை
  உன் அழகில்
  உணர்ந்து கொண்டிருக்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்ணுக்காய்
  மண்ணில் மாண்டவர்களை
  ஏளனமாய் எண்ணிய நான்
  உன்னை அடைந்த பின்புதான்
  அவர்களின் உன்னதத்தை
  உணர்கின்றேன்.

- இல்லறச் சோலையின்
  இன்பப் பெருக்கில்
  பூத்துக் குலுங்க.....
  நான் கண்ட கனவுகள்
  நிறைவாகிக் கொண்டிருப்பதை நினைத்து
  மகிழ்ச்சிப் பிரளயத்தில்
  மூழ்கிப் போகின்றேன்.

- உன்னைக் கண்ட பின்பு தான்
  அழகை என்னால்.....
  அறிய முடிந்தது.
  அதன் அர்த்தத்தையும்
  புரிய முடிந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன்னைப் பார்ப்பது கூட
  எனக்கு ஓர்
  இன்பப் பிரவாகமாய்
  இருக்கிறது.

- உன்னிடத்தில்
  சிறைப்பட்ட பின்பு தான்
  எனக்கு விடுதலை கிடைத்ததாய்
  விளங்கிக் கொள்கிறேன்.

- நீ.... என்னவளாய் ஆனது
  என் வசந்தத்தின் வருகையாயும்
  என் கவலைகளின் புதைகுழியாயும்
  ஆகிப் போனது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என் வாழ்வில்
  இருள் சூழ்கின்ற
  ஒவ்வோர் கணமும்
  ஆங்கே.... ஒளிக்கீற்றாய்ப்
  பிரகாசிப்பது.... நீதானே!

- சோகத்தின் சொந்தக்காரனாய்
  நான் ஆகுகின்ற பொழுதெல்லாம்
  என்னை
  ஆனந்தத்தால் ஆராதிப்பதும் நீதானே!

- இப்படியும் ஓர் பெண்ணா! என்று
  உன் வாழ்கை ஏட்டைப்
  படிப்பவர்கள் நிச்சயம்
  அதிசயத்துள்...
  ஆழ்ந்து போவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- மனைவியின் மாட்சிமைக்கு
  மகுடமாய் ஆகிப்போன ....நீ
  பெண்மையின் பெருமையாகவே.......
  என்றும் போற்றப்படுவாய்.

- வறுமையை அறியாமல்
  வளர்ந்தவள்.....நீ
  ஆயினும்...
  பணம்தான் வாழ்வென்று பகர்ந்ததில்லை
  இருப்பதைப் போதுமாக்கும் பேருள்ளம்
  உனக்கு உடைமையாகிப் போனது.

- எளிமையை...
  ஏற்றமெனக் கொள்ளும் இயல்பு
  உன்னையே....
  இருப்பிடமாக்கிக் கொண்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- அகங்காரம்
  நீ...
  அறியாத ஒன்று.

- சத்தியம் தான்
  உன் வாழ்வின்
  சங்கதியாய் இருக்கிறது.

- ஊரில் ...நீ
  பெண்மையின் பெருமையாய்
  நிச்சயம்... போற்றப்படுவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- ஜாபிறா என்னும் உன்நாமம்
  உறவார்களுக்கும்
  ஊரவர்களுக்கும்
  மரியாதைக்குரிய
  மங்கையென்றே மிளிர்கின்றது.

- மகத்துவமிக்க மாதர்களின்
  வரலாற்றை நான் படிக்கின்ற
  பொழுதுகளிலெல்லாம்
  ஆங்கே... அவர்களுடன்
  என் மனதுக்குள்
  உன் நினைவும் உருவாகின்றது.

- உன் கணவன் என்பதால்
  என் கனமும் உயர்வதாகவே
  உணர்கிறேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- நீதிக்குப் புறம்பாய்
  நீ.....
  நினைத்தது கூடக் கிடையாது.

- மனிதம்... உன்னில்
  இனிதாம் இடத்திலல்லவா....
  இருக்கிறது

- எந்தவோர் பெண்மையும்
  உன்னைப் பிழையாகக் கதைக்குமளவுக்கு
  என்றுமே... நீ...நடந்ததில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- பெண்மையின் தன்மைகளால்
  அணிசெய்யப்பட்ட ...நீ
  பெண்களில் பெருமைக்குரியவளாகவே
  பேசப்படுகின்றாய்.

- மாதர் மனங்களைக் கவரும்
  மந்திரசக்தி
  உனக்கு... உரித்தாகிப் போனதால்
  பெண்களால் பெரிதும்
  பூசிக்கப்படுகிறாய்

- ஊரில்...
  பெண்களுக்கு மத்தியில்
  உன் பெயரை உரைப்பது கூட
  மரியாதைக்குரியதாய்
  மதிக்கப்படுகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- சண்டைகளின் மத்தியில்
  சமாதானத்தின் சங்கமிப்பாய்
  இருப்பதும் உன் பண்பல்லவா!

- உன் நடத்தைகள் யாவும்
  என் நலன் என்றே
  காட்சி நல்குகின்றது.

- மாதர்களில் உன் மகிமை
  தனியோர் மகத்துவம் மிக்கதாய்
  மிளிர்கின்றது.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• உன் வாழ்க்கையில் இருந்துதான்
பெண்மையின் தத்துவத்தை
நான் அதிகம்....
புரிந்து கொண்டிருக்கிறேன்.

• என் கடமைகளை எல்லாம்
அதிகம்...நீ...சுமப்பதனால்
உனக்கு நான்
வசந்தங்களை அதிகம்
வருஷிக்கவில்லை என்பதையும் உணர்கிறேன்.

• நீ... என் நலனில்
அதிக அக்கறை கொண்டதால்
உன் நலனை என்னால்
உதாசீனம் செய்ய முடியாது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என் நலனுக்கு உரமென
  நீ... ஆகிப் போனதால்
  என் உயர்ச்சிகளிலெல்லாம்
  உன் தியாகத்தின் தடம்
  தென்படுகின்றது.

- பொறுமையும், புனிதமும்
  உன் பொக்கிசமாகிப் போனதால்
  பெண்மையின் பெருமையாகவே மிளிர்கின்றாய்.

- என் காயங்களுக்கெல்லாம்
  நீ... ஒத்தடமாகவே
  இருந்துகொண்டிருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன் உன்னத தன்மைகளால்
  ஊரில்...
  பெண்கள் சமூகத்தில் உன்பெயர்
  பெருமையாகவே பேசப்படுகிறது.

- உன் உளப்பரப்பில்
  என்றும்....
  என்நல விதைகளைத்தான் தூவினாய்
  அதனால் அதன் அறுவடைகள் எல்லாம்
  என் மகிழ்ச்சியாகவே மிளிர்கிறது.

- உன் நலன்களை எல்லாம்
  எனக்கென்று எடுத்துத் தந்ததால்
  தியாகத்தின் தீபமாகவே
  நீ..... எனக்குள்
  பிரகாசித்துக் கொண்டிருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- உன் வாழ்வெல்லாம்
  தியாகம் என்றாகிப் போனதால்
  நீ வசந்தத்தின் அரவணைப்பில்
  இருப்பது மிகக் குறைவு தான்
  அதிகம் வேதனைகளால்தான்
  ஆராதிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறாய்.

- பணத்தின் பக்கம் பாடாமல்
  நியாயத்தின் பக்கம்
  நிலை கொள்வது தானே!
  உன் பண்பு!

- நீ.. காண்கின்ற
  கனவுகள் கூட
  என் உயர்ச்சியாகவே
  இருந்து கொண்டிருக்கிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என் இல்லத்தின்
  இன்பமாக இருப்பவளே!
  உன் பெயரை உரைப்பது கூட
  எனக்கு... இன்பமாகவே இருக்கிறது.

- என் இல்லத்தின் ஏற்றமென
  ஆகிப் போனவள் ...நீ

- வேதனையின் வேக்காட்டிலெல்லாம்
  எனக்கு....
  வசந்தத்தின் வருஷிப்பாய்
  நீயே இருந்து கொண்டிருக்கிறாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என் இல்லறச்சோலை ஏட்டில்
உன் வாழ்க்கைப் பக்கங்கள்
பொன் ஓலைகளாகவே
மிளிர்ந்து கொண்டிருக்கும்.

- என் மகிழ்ச்சியில்
மகிழ்வு கண்டவளே!
என் மகிழ்வாகவும்
நீயே!... இருந்து கொண்டிருக்கிறாய்.

- இல்லறத்தின் இன்பம்
இல்லறத்தின் இலக்கணம்
இவ்வார்த்தைகள்
உன்னால்தான் உயிர்ப்படைகிறது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

- என்னவளே!
  உன் பெண்மையின் ஆளுமைக்குள்
  ஆயிரமாயிரம் வாழ்வியல் தத்துவங்கள்
  பொதிந்து கிடப்பதை
  நான் கண்டு கொண்டிருக்கிறேன்.

- இல்லத்தரசி என்னும்
  உன் நதிக்கரை ஓரத்தில்தான்
  என் வாழ்க்கை நாகரீகம்
  செழிப்புற்றோங்குகிறது.

- மார்க்கத்தில் அனுமதியில்லையே!
  இருந்தால்..........
  உன் உருவைச் சிலையாகச் செதுக்கி
  அதில்
  " இவள் தான் பெண்மையின் இலக்கணம்"
  " இவன் தான் இல்லறத்தின் தத்துவம்"
  என்ற வார்த்தைகளை வடித்திருப்பேன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• கணவனின் காலடியில்தான்
மனைவிக்குச் சொர்க்கம் என்றால்
நிச்சயம்.........நீ
சொர்க்கத்திற்குரியவள்தான்.

*************



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



காதல் நினைவுச் சின்னமெனக்
கற்கள் கொண்டு மாளிகையை
போதிய சிறப்பாய் அமைப்பதற்குப்
பாரிய செல்வம் எனக்கில்லை
ஆதலி னாலே என்னுடைய
அன்பின் மனைவி ஜாபிறாவை
சாதல் இல்லா நிலையினிலே
செகமும் நினைவு கூறுதற்காய்
ஈதாம் மனையாள் மாட்சிமையை
இயம்பிடும் காவிய நூல்தன்னை
பூதலம் தனுக்கு அளிப்பதிலே
பூரிப் பதிகம் காண்கின்றேன்.

காப்பியக் கதிரோன். எம்.எம்.ஏ. அனஸ்

ISBN. 978-955-38066-7-3

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org